Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 143/2022 PW-1**

Name : அரிகிருஷ்ணன்
Father / Husband name : ராகவன்
Village : பாண்டிச்சேரி
Age : 69
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 24.09.2025

A1 to A2 present. A3 absent. Petition u/s 355 BNSS filed and allowed. APP present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. சாட்சி நாகலட்சுமி எனது தங்கை. சாட்சிகள் கிருஷ்ணமூர்த்தி, கனகராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியும் வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். எனது தங்கை நாகலட்சுமிக்கு மாப்பிள்ளை பார்த்திருந்தார், அது எனது தங்கையின் கணவருக்கு பிடிக்காததால் பிரச்சனை ஏற்பட்டு எனது தங்கையின் மகள் பிரபாவதியை அவர் பேராவூரணிக்கு அழைத்துசென்றுவிட்டார். எனது தங்கை மறுப்பு எதுவும் சொல்லவில்லை, ஆனால் எதிரிகள் எனது தங்கையின் கணவருக்கு உறவினரான எதிரிகள் சமாதானம் பேசலாம் என்று சொல்லி எனது தங்கையும், நானும் எனது மகனும் சென்றோம். சமாதானம் எனது மச்சான் ஏழுமலையின் தம்பி கண்ணன் வீட்டின் அருகே நடந்தது. அந்த பஞ்சாயத்தில் கண்ணன் மற்றும் அவரின் பிள்ளைகள் ராமு, கணேசன் மற்றும் மற்றொரு பிள்ளை ஆகியோர்கள் கத்தி, தடி ஆகியவற்றை எனது தங்கையை கொலைமிரட்டல் விடுத்து தாக்கிவிட்டார்கள். நான் அதனை மறித்து திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு எனது தங்கையை அழைத்துவந்தேன்.

2. கடந்த 2022 ம் வருடத்தில் ஒருநாள் காலை சுமார் 10.30 - 11.00 மணியளவில்

திண்டிவனம் மேம்பாலத்தில் எனது தங்கையை அழைத்துக்கொண்டு காரில் வந்தபோது எதிரிகளின் தலைமையில் 15 நபர்கள் கத்தி, தடி ஆகியவற்றை காட்டி எங்களை வழிமறித்து எனது கழுத்தில் கத்தியை வைத்து உனக்கு என்னடா வேலை என்று என்னையும் எனது மகன், தங்கையை மிரட்டி தாக்கினார்கள். எதிரிகள் என்னை தடியால் உடல்முழுவதும் தாக்கினார்கள். காரின் உள்ளே இருந்த எனது தங்கையையும் தடியால் அடித்து தேவிடியா நீ ஏன்டி இங்க வந்த என்று அசிங்கமாகபேசி மிரட்டினார்கள். எனது மகனையும் தடியால் முதுகு, உடம்பில் அடித்து காலால் எட்டி உதைத்தார்கள். நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். பின்னர் பாண்டிச்சேரியில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எந்த தேதியில் எனது தங்கையின் மகளுக்கு மாப்பிள்ளை பார்க்க சென்றார்கள் என்றால் நினைவில்லை. மேற்படி தேதியை புகாரில் எழுதியுள்ளேனா என்றால் தேதி நினைவில்லை, விபரம் சொல்லியுள்ளேன். சமரசம் பேச அழைத்த போன் எண்ணை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் நினைவில்லை. சமரசம் பேச எனது தங்கை சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் சென்றேன், வீட்டின் வெளியில் நின்றிருந்தேன். மேற்படி விபரத்தை போலிசாரின் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது தங்கை அடித்ததாக போன் மூலம் எனக்கு தகவல் வந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. அசிங்கமாக பேசி திட்டியதாக எனது தங்கை போன் மூலமாக தகவல் சொன்னபிறகு நான் பேராவூரணிக்கு சென்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் அங்கு தான் இருந்தேன்.

நான் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, அந்த மருத்துவ ஆவணங்களை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். பாண்டிச்சேரியில் தனியார் மருத்துவமனையில் மருத்துவ ஆவணங்களை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது தங்கையை திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அழைத்துசென்றது யார் என்றால் நான் தான் அழைத்துச்சென்றேன். போலிசார் விசாரித்தபோது எனது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். உதயபிரகாஷ் யார் என்றால் எனது மகன்.

2. எனது மகனும் திண்டிவனம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால் எடுத்துக்கொண்டார். 15 பேர் கொண்ட கும்பலில் யார் எந்த ஆயுதத்தை வைத்திருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் முடியும், பெயர் தெரியாது, ஆட்களை பார்த்தால் அடையாளம் சொல்வேன். மருத்துவமனையில் நானும் எனது தங்கையும் கத்தி, தடியால் தாக்கியதாக சொன்னோமா என்றால் சொன்னோம். சிசிடிவி கேமரா பதிவுகளை நான் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. சிசிடிவி கேமரா உள்ளதாக போலிசார் சொன்னார்களா என்றால் இருப்பதாக சொன்னார்கள். பேராவூரணியில் எனது தங்கையை தாக்கும்போது எந்தெந்த இடங்களில் காயங்கள் இருந்தது என்றால் கழுத்து, முதுகு, தலை, கை மற்றும் உடல் முழுவதும் காயங்கள் இருந்தது. நாங்கள் சென்ற வாடகை காரின் பதிவு எண் என்ன என்றால் நினைவில்லை. அந்த காரின் ஓட்டுநருக்கு சம்பவம் தெரியும் என்றால் சரிதான், அவரையும் மிரட்டினார்கள்.

3. பேராவூரணியில் நடந்த சம்பவத்திற்கு கிளியனூரில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன், அந்த ஆவணங்களை இந்த வழக்கின் புகாரருடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அந்த புகாருக்கு கிளியனூர் காவல் நிலையத்தில் சிஎஸ்ஆர் பதிவு செய்தார்களா என்றால் நினைவில்லை.

கிளியனூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் நினைவில்லை. மேம்பாலத்தின் கீழ் இறங்கும்போது தான் பிரச்சனை நடந்தது என்று மருத்துவரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன், பேராவூரணியில் நடந்த முதல் பிரச்சனைக்கு பிறகு திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு வரும்வழியில் நடந்த இரண்டாவது பிரச்சனையில் பயந்துகொண்டு இங்கு சிகிச்சை எடுக்கவில்லை, பாண்டிச்சேரி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். திண்டிவனத்தில் நடந்த பிரச்சனைக்கு பாண்டிச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோம் என்றால் சரிதான். புகாரில் பேராவூரணியிலிருந்து திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு வரும்வழியில் பிரச்சனை நடக்கவில்லை, மருத்துவமனைக்கு சென்றுவிட்டுபோகும் வழியில் பிரச்சை நடந்தது என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான். மேற்படி விவத்தை புகரில் சொல்கிறேன் என்றால் சரிதான். சொன்ன நேரத்தில், சொன்ன சமயத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை, எனது தங்கை அவரின் மச்சுனன் மீதுள்ள முன்விரோத்தால் பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 15 நபர்கள் வழிமறித்து தாக்கியதாக பொய்யான சாட்சியம் அளிக்கிறனே் என்றால் சரியல்ல. நாங்கள் பாண்டிச்சேரிக்கு செல்லும்போது வழிமறித்து அடித்தநேரம் என்ன இருக்கும் என்றால் சுமார் 09.30 - 10.30 மணி இருக்கும். மேற்படி விவரத்தையும் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும் எனது மகனும் சிகிச்சை எடுக்கவில்லை பொய்யான சாட்சியம் அளிக்கிறனே் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**